# 2011 உலகளாவிய தலைமைத்துவ விருதளிப்பில் 34 பேருக்கு விருது



படம்: தி. மோகன்

கோலாலம்பூர், ஜூலை 24–

இவ்வாண்டிற்கான உலகளாவிய தலைமைத்துவ விருதளிப்பு நிகழ்ச் சியில் மலேசியா உட்பட வெளிநாடு களைச் சேர்ந்த 34 பேருக்கு பல வகை யான விருதுகள் வழங்கி கௌரவிக் கப்பட்டது.

விருது பெற்றவர்களில் பி.என்.பி. நிறுவனத்தின் தலைவர் டான்ஸ்ரீ ஹமாட் கமா பியாவுக்கு இவ்வாண்டின் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஏர் ஆசியாவின் தலைமைச் செயல் முறை அதிகாரி டான்ஸ்ரீ டோனி பெர் னாண்டசுக்கு இவ்வாண்டின் தொலை நோக்கு தலைமைச் செயல் முறை அதிகாரி விருது வழங்கி கௌரவிக் கப்பட்டது.

வெஸ்போர்ட் மலேசியா செண்டிரி யான் பெர்ஹாட்டின் தலைவர் ருபேன் எமிர் ஞானலிங்கத்திற்கு இவ் வாண்டின் வளர்ந்து வரும் தலைமைச் செயல் முறை அதிகாரி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பத்மஸ்ரீ டாக்டர் டி.ஒய். பட்டில் பல்கலைக்கழத்தைச் சேர்ந்த டாக்டர் டி.ஒய். பட்டிலுக்கு இவ்வாண்டின் கல்வி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ராமு சிஸ்டம் லிமிடெட் நிறுவ னத்தின் தலைவர் பி.ஆர். வெட்கட்ராம ராஜாவுக்கு இவ்வாண்டிற்கான தொழில்நுட்ப சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக் கப்பட்டது.

பார்வின் டிராவல் பிரைவெட் லிமி டெட் நிறுவனத்தின் தலைவர் ஏ. அஃஸாலுக்கு இவ்வாண்டிற்கான சுற்றுலா விருது வழங்கி கௌர விக்கப்பட்டது.

தகவல், தொடர்பு, பண்பாட்டுத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ராய்ஸ் யாத்திம், மகளிர், குடும்ப, சமூக மேம்பாட்டுத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ ஷரிஸாட் அப்துல் ஜாலில் ஆகியோர் சிறப்பு வருகை புரிந்து சாதனையாளர்களுக்கு விருது களை எடுத்து வழங்கினர்.